பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 03 2025 **MONDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- புனித ரமலான் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.
- தமிழ் கலாச்சார பாரம்பரியத்தை ஊக்குவிக்கும் வகையில் கம்பராமாயண விழா நடத்தப்படுவதாக ஆளுநர் திரு. ஆர். என். ரவி கூறியுள்ளார்.
- தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களில் எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர்கள் மேற்கொண்டிருந்த வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.
- ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக மத்திய அரசு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சத்திஷ்கர் மாநிலம், பிலாஸ்பூரில் 33 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய அவர், பழங்குடியினருக்கான சுகாதார வசதிகளை மேம்படுத்துவதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டிருப்பதாக கூறினார்.

இம்மாநிலத்தில் உள்ள 3 லட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இதன்மூலம் கிராமப்புற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்திருப்பதுடன், கட்டுமானப் பொருட்கள் உள்ளூரிலேயே கொள்முதல் செய்யப்பட்டதால், சிறுவியாபாரிகளும் பயனடைந்திருப்பதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

>>>>>><<<<<<

புனித ரமலான் பண்டிகை இன்று வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, சிறப்புத் தொழுகையில் பங்கேற்ற இஸ்லாமியர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

ரமலான் பண்டிகையை ஒட்டி, தலைவர்கள் பலர் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், புனித ரமலான் மாதத்தில் இஸ்லாமியர்கள் கடைபிடித்து வந்த நோன்பின் நிறைவை குறிக்கும் இந்நாளில் சகோதரத்துவம், ஒற்றுமை மற்றும் கருணை தழைத்தோங்கட்டும் என தெரிவித்துள்ளார்.

இந்நாள் மக்கள் அனைவரிடமும் அமைதி, முன்னேற்றம் மற்றும் மகிழ்ச்சியை அளிக்கட்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர் தமது வாழ்த்துச் செய்தியில், கலாச்சார பன்முகத்தன்மை மற்றும் மக்கள் ஒருங்கிணைப்பின் வலிமையை இந்நாள் நினைவுபடுத்துவதாக கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நபிகள் நாயகம் போதித்த நெறியில் வாழ்ந்து, நோன்பு கடமைகளை நிறைவேற்றிய மனநிறைவோடு ரமலான் திருநாளை கொண்டாடும் இஸ்லாமியர்கள் அனைவருக்கும் தமது நல்வாழ்த்துகளை உரித்தாக்குவதாக தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள செய்தியில், நபிகள் நாயகத்தின் போதனைகளை நினைவில் கொண்டு, தத்தமது கடமைகளை செவ்வனே மேற்கொண்டு சிறப்பாக வாழ வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக கம்பன் கழகங்கள் புது உத்வேகத்துடன் கம்பராமாயணத்தை பரப்பும் பணியை மேற்கொண்டு வருவதாக ஆளுநர் திரு. ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டம், தேரழுந்தூரில் மத்திய கலாச்சார அமைச்சகத்தால் நடத்தப்படும் பத்து நாள் கம்பராமாயண விழாவை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த கலைஞர்கள் மற்றும் அறிஞர்கள்  ராமாயணம் தொடர்பான நிகழ்ச்சிகளை நடத்தவிருப்பதாக கூறினார்.

இத்தகைய நிகழ்ச்சிகள் தமிழ் கலாச்சார பாரம்பரியத்தை ஊக்குவிப்பதாக அமையும் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

>>>>>><<<<<<

தமிழகத்தை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவை தேர்தலில் திமுக வெற்றிபெறுவது அவசியம் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலி வாயிலாக பங்கேற்றுப் பேசிய அவர், தமிழக மக்கள் திமுக-மீது வைத்துள்ள நம்பிக்கை காரணமாகவே ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளரை வெற்றிபெறச் செய்ததாக கூறினார்.

இதனை கருத்தில் கொண்டு, திமுகவினர் தொடர்ந்து தீவிரமாக களப்பணியாற்ற வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

தமிழகம் உள்ளிட்ட தென்மாநிலங்களில் எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் வாபஸ் பெறப்பட்டுள்ளது.

இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலிய நிறுவனங்களின் புதிய ஒப்பந்த நிபந்தனைகளை தளர்த்தக் கோரியும், வாடகை நிர்ணயத்தில் பழைய முறையையே பின்பற்றக் கோரியும் எல்பிஜி டேங்கர் லாரி உரிமையாளர் சங்கத்தினர், கடந்த 27ஆம் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், நாமக்கல் அருகே நேற்று நடைபெற்ற இந்த சங்கத்தின் அவசர செயற்குழுக் கூட்டத்தில் வேலைநிறுத்தத்தை திரும்பப் பெற முடிவு செய்யப்பட்டதாக சங்கத்தின் தலைவர் திரு. சுந்தரராஜன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சுந்தரராஜன் 31 செகண்ட்ஸ்

>>>>>><<<<<<

நாட்டில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, வேளாண் பொருட்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது அவசியம் என்று திருவள்ளுவர் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. ஆறுமுகம் வலியுறுத்தியுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டியில் விவசாய உற்பத்தியாளர்கள் நிறுவனத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், விவசாயிகள் தங்களது உற்பத்திப் பொருட்களை மதிப்புக்கூட்டுவதன் மூலம் அதிக லாபம் அடைய முடியும் என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - ஆறுமுகம் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நீலகிரி மாவட்டம், லவ்டேல் மலைரயில் நிலையத்தின் 117வது ஆண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தோடர் பழங்குடியின மக்களின் பாரம்பரிய நடனத்துடன் நடைபெற்ற இந்த கொண்டாட்டத்தில் சுற்றுலாப் பயணிகள் உற்சாகத்துடன் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 36 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

அமெரிக்காவின் **SpaceX** நிறுவனத்தின் துருவ சுற்றுப்பாதையை ஆய்வு செய்வதற்கான விண்கலம், ஃபுளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து இன்று செலுத்தப்படுகிறது.

>>>>>><<<<<<

கனடாவின் **Ontario** பகுதியில் பனிப்புயல் காரணமாக மின்சாரம் தடைபட்டதால் சுமார் 3 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

கிரீஸ் நாட்டில் இன்று தொடங்கும் 12 நாள் சர்வதேச விமானப் பயிற்சியில் இந்திய விமானப் படை பங்கேற்கிறது.

>>>>>><<<<<<

மும்பை விமான நிலையத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் 60 நாட்களுக்கு பாரா கிளைடர்கள் மற்றும் பலூன்களை பறக்கவிடவும், ஒளி உமிழும் சாதனங்களை பயன்படுத்தவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

சென்னை, அண்ணாநகர் மண்டலத்திற்குட்பட்ட திருநகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள இறகுப் பந்து உள்விளையாட்டு அரங்கத்தை மாநில அமைச்சர் திரு. சேகர்பாபு நேற்று திறந்து வைத்தார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நேற்று இரண்டு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் **Udit-**ம், 92 கிலோ எடைப்பிரிவில் **Deepak Puniya** –வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

125 கிலோ எடைப்பிரிவில் தினேஷ் வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

**>>>>>><<<<<<**

உலக கோப்பை குத்துச்சண்டைப் போட்டி, பிரேஸிலில் இன்று தொடங்குகிறது.

வரும் 5ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில், 19 நாடுகளைச் சேர்ந்த 130 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

நரேந்தர் தலைமையிலான 10 பேர் கொண்ட இந்திய அணி இப்போட்டியில் பங்கேற்கவுள்ளது.

**>>>>>><<<<<<**